Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

.C.C. No.57/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V.செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | காய்கறி வியாபரம் |
| பெயர். | - | அமுதா | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க/பெ. | | சிவா (எ) வீரவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | மாதம்பட்டு | வயது | - | 35 |

24.09.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5, 6 எதிரிகள் ஆஜரில்லை. 5, 6 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் மாதம்பட்டில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4-5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 09.45 மணிக்குமேல் நாங்கள் காய்கறி வியாபாரம் முடித்துவிட்டு டாடா ஏசியில் வாகனத்தில் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது எங்கள் களம் அருகே எதிரிகள் ஆபேல், தாமஸ், மகேஷ் மற்றும் 2-3 நபர்கள் குடித்துக்கொண்டிருந்தார்கள். ஏற்கனவே எனது கணவர் களத்தை எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்வதாக தாலுக்கா ஆபிசில் மனு கொடுத்திருந்தார். அது சம்மந்தமாக எதிரிகள் எனது கணவரிடம் தகராறு செய்தார்கள்.

2. அப்போது எதிரி தாமஸ் எனது கணவரை கையால் கண்ணத்தில் அடித்தார். பின்பு எதிரிகள் ஆபேல் மற்றும் மகஷே ஆகியோர்கள் எனது கணவரை கையால் அடித்தார்கள். எதிரி மோட்சராணி என்பவர் துடப்பத்தால் எனது கணவரை அடித்தார். எதிரி தாமஸ் அங்கிருந்த கம்பியால் எனது கணவரை மார்பிலும், முதுகிலும் அடித்தார். கேட்க சென்ற என்னை தாமஸ் என்பவரை என் புடவையை பிடித்து இழுத்து கையால் அடித்தார்.

3. பின்பு நானும் எனது கணவரும் வின்சென்ட் என்பவரின் துணையுடன் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். பின்னர் இது சம்மந்தமாக எனது கணவர் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.57/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V.செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | காய்கறி வியாபரம் |
| பெயர். | - | சிவா (எ) வீரவேல் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | அருள் | சமயம் | - | |
| கிராமம் | - | மாதம்பட்டு | வயது | - | 40 |

24.09.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5, 6 எதிரிகள் ஆஜரில்லை. 5, 6 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் மாதம்பட்டில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. 2021ல் ஒருநாள் இரவு 09.30 மணிக்குமேல் காய்கறி வியாபாரம் முடித்துவிட்டு டாடா ஏசியில் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் ஆபேல், தாமஸ், மகேஷ் ஆகியோர்கள் நெல் அடிக்கும் களத்தில் குடித்துக்கொண்டிருந்தார்கள்.

2. நான் அவ்வழியாக வந்தபோது அவர்கள் குரல் கொடுத்து கூப்பிட்டார்கள். நான் பொருள் வாங்குவதற்காக கூப்பிடுகிறார்கள் என்று நினைத்து வாகனத்தை நிறுத்தினேன். அப்போது ஆபேல் என்பவர் "தேவிடியா பையா, கை காண்பிக்கிறேன். குரல் கொடுக்கிறேன் நீ பாட்டுக்கு போகிறாய், பி.டி.ஓ. ஆபிசில் பெட்டிசன் கொடுத்தால் நீ என்ன பெரியபூலா இந்த ஊரில் நீ வாழ்ந்துவிடுவாயா என்று அசிங்கமாக பேசி கையால் என் கண்ணத்தில் அடித்தார். நீ ஒரு வீட்டுக்காரன் எப்படி குடும்பம் நடத்துற என்று நான் பாக்கிறேன் என்றுசொல்லி

கையால் அடித்தார். பின்பு தாமசும் , மகேசும் என்னை சரமாறியாக கையால் உடம்பில் அடித்தார்கள்.

3. அதன்பின்பு எனது மனைவி வந்து கேட்டபோது எதிரி ஆபேல் என்பவர் என் மனைவியை வண்டியிலிருந்து கீழே இழுத்துப்போட்டு அடித்தார். எதிரி போனிபாஸ்கர் என்பவர் என்னை கையால் அடித்தார். அங்கு வந்த மோட்சராணி என்பவர் துடப்பத்தால் என்னை அடித்தார். எதிரி ஆபேல் என்பவர் அருகிலிருந்த வீடு கட்டும் கம்பியால் எனது மார்பிலும் முதுகிலும் அடித்தார். பின்பு எதிரிகள் அனைவரும் என்னை கையால் அடித்தார்கள்.

4. பின்பு நானும் எனது மனைவியும் வின்சென்ட் என்பவரின் துணையுடன் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். பின்னர் இது சம்மந்தமாக திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ-1 ஆகும்.** போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-Cum-JM,
T.V.Nallur.